பூரணமாய் பதிலளிக்கிறவரே " சங் 31:

873. இருதயங்களை உருவாக்கி
செயல்களை எல்லாம்
கவனிக்கிறவரே " சங் 33:

874. மனுஷருடைய ஆவியை
அவனுக்குள் உருவாக்கும்
கர்த்தரே " சகரி 12

875. மனுஷனுடைய நினைவுகள்
இன்னதென்று அவனுக்கு
வெளிப்படுத்துகிறவரே " ஆமோ 4:

876. அவனவன் செய்கைக்குத்
தக்கதாய் பலனளிக்கிறவரே " சங் 62:

877. தமக்குப் பயந்தவர்களைச்
சூழப் பாளயமிறங்கி
விடுவிக்கிறவரே " சங் 3

78. உமது நாமத்திற்கு பயப்படுகிற
வர்களின் சுதந்திரத்தை
எனக்குத் தந்ததற்காய் ஸ்தோத்திரம் சங் 61:5

79. நொறுங்குண்ட
இருதயமுள்ளவர்களுக்குச்
சமீபமாயிருந்து நறுங்குண்ட
ஆவியுள்ளவர்களை
இரட்சிக்கிறீர் ” சங் 34:18

80. நீரே காரியத்தை வாய்க்கப்
பண்ணுகிறவர் ” சங் 37:5

81. வல்லமை தேவனுடையது
என விளம்பினீர் ஆகவே ” சங் 62:11

82. ஜெபத்தைக் கேட்கிறவரே
மாம்சமான யாவரும்
உம்மிடத்தில் வருவார்கள்
ஆகவே உமக்கு ” சங் 65:2

83. உம்மாலே செய்யக்கூடாத
அதிசயமான காரியம்
ஒன்றுமில்லை ஆகவே ” எரே 32:27

84. சகலத்தையும் அதினதின்
காலத்திலே நேர்த்தியாகச்
செய்திருக்கிறவரே ” பிர 3:11

885. என் தேவனால் எல்லாம் கூடும் | ஸ்தோத்திரம் | லூக் 1:3
886. அப்பா பிதாவே எல்லாம் உம்மாலே கூடும் | ” | மாற் 14:3
887. நீர் சொல்ல ஆகும் நீர் கட்டளையிட நிற்கும் ஆகவே உமக்கு | ” | சங் 33
888. முழங்கால் யாவும் முடங்கும் நாவு யாவும் தேவனை அறிக்கை பண்ணும் ஆகவே | ” | ரோ 14:1
889. கர்த்தாவே உமது கிரியைகளினால் பூமி திருப்தியாயிருக்கிறது | ” | சங் 104:1
890. பூமி உம்முடைய பொருட்களினால் நிறைந்திருக்கிறது | ” | சங் 104:2
891. கர்த்தாவே நீர் பூமியின் ரூபத்தை புதிதாக்குகிறீர் | ” | சங் 104:3
892. தேவரீர் பூமியை விசாரித்து அதற்கு நீர்ப்பாய்ச்சுகிறீர் | ” | சங் 65

3. தண்ணீர் நிறைந்த தேவ
நதியினால் பூமியை
செழிப்பாக்குகிறீர் ஸ்தோத்திரம் சங் 65:9

4. பூமியின் பயிரை
ஆசீர்வதிக்கிறீர் " சங் 65:10

5. பூமி உம்முடைய
காருண்யத்தால்
நிறைந்திருக்கிறதற்காக " சங் 33:5

6. பூமியின் எல்லைகளை
திட்டம் பண்ணினவரே " சங் 74:17

7. பூமியின் கடையாந்திரங்களைச்
சிருஷ்டித்தவரே " ஏசா 40:28

8. வானத்தில் தமது மேல்
அறைகளைக் கட்டி பூமியில்
தமது கீழ் அறைகளை
அஸ்திபாரப்படுத்தியுள்ளவரே " ஆமோ 9:6

9. பூச்சக்கரத்தை அசையாதபடி
உறுதிப்படுத்துகிறவரே " 1நாளா 16:30

0. உன்னதமானவருடைய
வலக்கரத்தில் உள்ள
வருஷங்களுக்காக " சங் 77:10

901. உம்முடைய வருஷங்களின்
இலக்கம் ஆராய்ந்து முடியாதது
ஆகவே உமக்கு ஸ்தோத்திரம் யோபு 36

902. வருஷத்தை உம்முடைய
நன்மையால் முடிசூட்டுகிறீர் " சங் 65

903. உம்முடைய பாதைகள்
நெய்யாய்ப் பொழிவதற்காக " சங் 65

904. உம்மிடத்தில் உள்ள ஜீவ
ஊற்றுக்காக " சங் 3

905. மகா ஆழமாக இருக்கும் உம்
நியாயங்களுக்காக " சங் 3

906. மகா ஆழமான உம்
யோசனைகளுக்காக " சங் 9

907. ஆ! தேவனே உமது
ஐசுவரியம், ஞானம், அறிவு
என்பவைகளின்
ஆழம் எவ்வளவாயிருக்கிறது " ரோ 11

908. ஆராய்ந்து முடியாத உம்
மகத்துவத்திற்காக " சங் 14

909. ஆராய்ந்து முடியாத பெரிய
காரியங்களையும் எண்ணி
முடியாத அதிசயங்களையும்
செய்பவரே " யோபு 9

10. ஆராய்ந்து முடியாத
நியாயமாய் வல்லமையுள்ளவர்களை
நொறுக்கிப் போடுபவரே
ஸ்தோத்திரம் யோபு 34:24

11. உம்முடைய புத்தி
ஆராய்ந்து முடியாதது ” ஏசா 40:28

12. உம்முடைய வழிகள்
ஆராயப்படாதவைகள் ” ரோ 11:33

13. மகத்துவமுள்ள உம்
கிரியைகளுக்காக ” சங் 92:5

14. உமது கிரியை உத்தமமானது
உம் வழிகள் எல்லாம் நியாயம் ” உபா 32:4

15. பர்வதங்கள் போலிருக்கும்
உம் நீதிக்காக ” சங் 36:6

16. வானத்துக்கும் பூமிக்கும்
மேலான உம் மகிமைக்காக ” சங் 148:13

17. வானங்களில் விளங்கும்
உம் கிருபைக்காக ” சங் 36:5

18. மேகங்கள் பரியந்தம்
எட்டுகிற உம் சத்தியத்திற்காக ” சங் 36:5

19. மனுபுத்திரர் வந்தடையும் உம்
செட்டையின் நிழலுக்காக ” சங் 36:7

920. ஆயிரம் பதினாயிரமான
தேவனுடைய இரதங்களுக்காக
ஸ்தோத்திரம் சங் 68:1

921. மேகங்களை இரதமாக்கி
காற்றின் செட்டைகளின்
மேல் செல்லுகிறவரே " சங் 104

922. வனாந்திரங்களில் ஏறி
வருகிறவரே " சங் 68

923. வானங்களைத் திரையைப்
போல் விரித்திருப்பவரே " சங் 104

924. நட்சத்திரங்களையெல்லாம்
எண்ணி அவைகளைப்
பேரிட்டு அழைக்கிறவரே " சங் 147

925. நட்சத்திரங்களை மறைத்துப்
போடுகிறவரே " யோபு 9

926. தேவ பக்தியுள்ளவர்களை
சோதனையினின்றுஇரட்சிக்க
அறிந்த கர்த்தரே " 2பேது 2

927. அக்கிரமக்காரரை
ஆக்கினைக்குள்ளாக
நியாயத்தீர்ப்பு
நாளுக்கு வைக்கவும்
அறிந்த கர்த்தரே " 2பேது 2

28. எம்முடைய இருதயத்திலும் பெரியவராயிருந்து சகலத்தையும் அறிந்திருக்கிறீரே ஸ்தோத்திரம் 1யோ 3:20
29. யோனாவிலும் பெரியவரே " மத் 12:41
30. சாலமோனிலும் பெரியவரே " மத் 12:42
31. எல்லாரிலும் பெரியவரே " யோ 10:29
32. தேவாலயத்திலும் பெரியவரே " மத் 12:6
33. சீயோனில் பெரியவரே " சங் 99:2
34. உலகத்திலிருக்கிறவனிலும் எங்களில் இருக்கிறவர் பெரியவரே " 1யோ 4:4
35. உமது அறிவு அளவில்லாதது ஆண்டவரே " சங் 147:5
36. உம்முடைய காருண்யம் பெரியது ஆண்டவரே " சகரி 9:17
37. உமது சௌந்தர்யம் பெரியது ஆண்டவரே " சகரி 9:17
38. உம்முடைய உண்மை பெரியது ஆண்டவரே " புல 3:23
39. உம்முடைய இரக்கங்கள் மகா பெரியது ஆண்டவரே " 1 நாளா 21:13
40. உமது மகிமை பெரியது " சங் 138:5

941. உமது கிருபை பெரியது
ஆண்டவரே ஸ்தோத்திரம் சங் 86

942. பகற்காலத்தில் கிருபையைக்
கட்டளையிடுவதற்காய் " சங் 4

943. ஜீவனைப்பார்க்கிலும்
உமது கிருபை நல்லது
ஆகவே உமக்கு " சங் 6

944. கிருபையையும் மகிமையையும்
அருளுபவரே " சங் 84

945. தேவனே உமது கிருபை
எவ்வளவு அருமையானது " சங் 3

946. தேவனே உமது கிருபை
என்றுமுள்ளது ஆகவே உமக்கு " சங் 10

947. நாங்கள் நிர்மூலமாகாது
இருப்பது உம் கிருபையே " புல 3

948. காலைதோறும் உம் கிருபைகள்
புதியவைகளாயிருப்பதற்காய் " புல 3

949. கிருபையினாலும்
இரக்கங்களினாலும்
முடிசூட்டுகிறவரே " சங் 10

950. முடிவில்லாத உம்
இரக்கங்களுக்காக " புல 3

251. தேவரீர் நீர் செய்த சகல
உபகாரங்களுக்காக ஸ்தோத்திரம் சங் 103:2

252. கர்த்தாவே நீர் மகிமையையும்
மகத்துவத்தையும் அணிந்து
கொண்டிருக்கிறீர் ” சங் 104:1

253. நீர் பராக்கிரமத்தை அணிந்து
அதைக் கச்சையாகக் கட்டிக்
கொண்டிருக்கிறீர் ” சங் 93:1

254. ஒளியை வஸ்திரமாகத் தரித்து
கொண்டிருக்கிறீர் ” சங் 104:2

255. நீதியை மார்க்கவசமாக
அணிந்திருப்பவரே ” ஏசா 59:17

256. இரட்சிப்பென்னும் சீராவை
சிரசில் தரித்திருப்பவரே ” ஏசா 59:17

257. நீதி சரிகட்டுதல் என்னும்
வஸ்திரங்களை உடுப்பாக
அணிந்திருப்பவரே ” ஏசா 59:17

258. வைராக்கியத்தைச் சால்வையாகப்
போர்த்துக் கொண்டவரே ” ஏசா 59:17

259. இருபுறமும் கருக்குள்ள
பட்டயத்தை உடையவரே ” வெளி 2:12

260. தம்முடைய தூதர்களைக்
காற்றுகளாக செய்பவரே ” சங் 104:4

961. தவனள்ள ஆத்துமாவைத்
திருப்தியாக்குபவரே ஸ்தோத்திரம் சங் 107

962. பசியுள்ள ஆத்துமாவை
நன்மையால் நிரப்புகிறவரே " சங் 107

963. தமது வசனத்தை அனுப்பி
குணமாக்குகிறவரே " சங் 107:2

964. சிறுமையில் ஆறுதலாயிருந்த
உம் வசனத்திற்காக " சங் 119:5

965. உமது வேதத்தில் உள்ள
அதிசயங்களுக்காக " சங் 119:1

966. உம் வசனத்தை
நம்பச் செய்தீரே " சங் 119:4

967. உம்முடைய வாக்கு என்னை
உயிர்ப்பித்ததற்காய் " சங் 119:5

968. உம்முடைய வசனத்தின்படி
என்னை நன்றாய் நடத்தினீர்
(நடத்துகிறீர், நடத்துவீர்) " சங் 119:6

969. உம்முடைய வசனம் என்
கால்களுக்குத் தீபமும் என்
பாதைக்கு வெளிச்சமா
யிருப்பதற்காக " சங் 119:10

70. உம்முடைய வசனம்
பேதைகளை உணர்வுள்ள தாக்குகிறதற்காய்
ஸ்தோத்திரம் சங் 119:130

71. மிகவும் புடமிடப்பட்ட உம்
வார்த்தைகளுக்காய் " சங் 119:140

72. உம்முடைய வார்த்தைகள்
எனக்குச் சந்தோஷமும்
மகிழ்ச்சியுமாயிருப்பதற்காக " எரே 15:16

73. செம்மையாய் நடக்கிறவனுக்கு
நன்மை செய்யும் உம்
வார்த்தைகளுக்காய் " மீகா 2:7

74. உம்முடைய வார்த்தை எல்லா
அங்கீகரிப்புக்கும் பாத்திர
முள்ளதாயிருப்பதற்காக " 1தீமோ 4:9

75. உம்முடைய வார்த்தை ஜீவனும்
வல்லமையுள்ள
தாயிருப்பதற்காக " எபி 4:12

76. அக்கினியைப் போலும்
கன்மலையை நொறுக்கும்
சம்மட்டிப் போலும் இருக்கிற
உம் வார்த்தைகளுக்காய் " எரே 23:29

77. உமது வார்த்தைகளை
அக்கினியாக்குபவரே " எரே 5:14

978. உம்முடைய வார்த்தை
உத்தமமும் உம்முடைய
செயல்கள் எல்லாம்
சத்தியமுமாயிருப்பதற்காக
ஸ்தோத்திரம் சங் 3

979. உம்முடைய கற்பனையோ
மகா விஸ்தாரம் ஆகவே
உமக்கு ” சங் 119

980. நீர் பயங்கரமான
காரியங்களை எங்களுக்குச்
செய்தீர், செய்கிறீர், செய்வீர் ” சங் 6

981. நீதியுள்ள உத்தரவு
எங்களுக்கு அருளுகிறீர் ” சங் 6

982. உம்முடைய கோபம் ஒரு
நிமிஷமே உம்முடைய தயவோ
நீடிய வாழ்வு ஆகவே ” சங் 3

983. எப்பொழுதும் கடிந்து
கொள்ளாதவரே
என்றென்றைக்கும்
கோபம் கொண்டிராதவரே ” சங் 10

984. உமக்குப் பயப்படும்படிக்கு
உம்மிடத்தில் மன்னிப்பு
உண்டு ஆகவே உமக்கு ” சங் 13

985. உம்மிடத்தில் திரளான மீட்புண்டு ஸ்தோத்திரம் சங் 130:7

986. உமது இரட்சிப்பினிமித்தம் உம்மை ஸ்தோத்தரிப்பேன் ” சங் 42:5

கர்த்தாவே உமது கிரியைகள் எவ்வளவு திரளாயிருக்கிறது அவைகளையெல்லாம் ஞானமாய் படைத்தீர் ஸ்தோத்திரம்

- சங்கீதம் 104:24

987. வானங்களை ஞானமாய் உண்டாக்கினவரே (சங் 96:5) ஸ்தோத்திரம்

988. உலகங்களை உண்டாக்கினவரே (எபி 1:2) ”

989. வானத்தையும் பூமியையும் உண்டாக்கினவரே ”

990. வெளிச்சத்தை உண்டாக்கினவரே ”

991. ஆகாயவிரிவையும் சமுத்திரத்தையும் சமுத்திரத்திலே உப்பையும் உண்டாக்கினவரே ”

992. பூக்கள், கனிகள், கிழங்குகள்,
காய்கள், கீரைகள் இவைகளுக்
காகவும் இவைகளைக் கொடுக்கும்
மரம், செடி, கொடி,
புல் பூண்டுகளுக்காக ஸ்தோத்திர

993. சூரிய சந்திர நட்சத்திரங்களுக்காக

994. நீர்வாழும் மிருகங்கள்,
நீர்பறவைகள் மற்றும்
மீன்களுக்காக ”

995. பறவைகள், வீட்டு மிருகங்கள்,
காட்டு மிருகங்கள், ஊரும்
பிராணிகளுக்காக ”

996. மண்ணினாலே மனிதனை
உண்டாக்கி ஜீவசுவாசத்தை
கொடுத்து ஏற்ற துணையைக்
கொடுத்தீரே ”

997. நீர் திட்டம் பண்ணின
காலங்களுக்காக, மழைக்காக
பனிக்காக, வெயிலுக்காக,
காற்றுக்காக, தென்றல் காற்றுக்காக ”

998. ஆறுகளுக்காக, ஓடைகளுக்காக
ஏரிகளுக்காக, குளங்களுக்காக ”

99. மலைகளுக்காக, குன்றுகளுக்காக,
மேடுகளுக்காக, பள்ளத்தாக்கு
களுக்காக, சமபூமிகளுக்காக,
பாலைவனங்களுக்காக,
பனிப்பிரதேசங்களுக்காக ஸ்தோத்திரம்

000. காடுகளுக்காக, குகைகளுக்காக,
நிலத்தடி கனிமங்களுக்காக,
நிலத்தடி நீருக்காக, எண்ணெய்
ஊற்றுகளுக்காக, எரிவாயு ஊற்றுகளுக்காக "

தொடர்ச்சி

உமது கிரியைகள் அதிசயமானவைகள் ஸ்தோத்தரிக்கிறோம் ஆண்டவரே

எகிப்தியரின் தலைச்சன்களைச்
சங்கரித்தவரே ஸ்தோத்திரம் சங் 136:10

எகிப்தின் தேவர்கள்மேல்
நீதி செலுத்தினவரே " எண் 33:4

கடலை உலர்ந்த தரையாக
மாற்றினீர் " யாத் 14:21

4	சமுத்திரத்தை இரண்டாகப் பிளந்து ஜலத்திலுள்ள வலுசர்ப்பங்களின் தலையை உடைத்தீர்	ஸ்தோத்திரம்	சங் 74
5.	தேவரீர் முதலைகளின் தலையை நருக்கிப் போட்டு அதை வனாந்திரத்து ஜனங்களுக்கு உணவாகக் கொடுத்தீர்	”	சங் 74
6.	ஊற்றையும் ஆற்றையும் பிளந்தீர்	”	சங் 74
7.	மகாநதிகளை வற்றிப் போகப் பண்ணினீர்	”	சங் 74
8.	ஆற்றை கால்நடையாய் கடக்கச் செய்தீர்	”	சங் 6
9.	பகலிலே மேகத்தினாலும் இரவிலே அக்கினி வெளிச்சத்தாலும் ஜனத்தை வனாந்திரத்திலே நடத்தினீர்	”	சங் 78
10.	கன்மலையைப் பிளந்து தண்ணீரை குடிக்கக் கொடுத்தீர்	”	சங் 78

மாராவின் தண்ணீரை மதுரமாக்கினீர்	ஸ்தோத்திரம்	யாத் 15:25
தூதர்களின் அப்பமாகிய மன்னாவை கொடுத்தீர்	”	சங் 78:25
பார்வோனையும் அவன் சேனையையும் சிவந்த சத்திரத்தில் கவிழ்த்துப் போட்டீரே	”	சங் 136:15
எரிகோவின் கோட்டையை வீழ்த்தினீர்	”	யோசு 6:20
பெரிய ராஜாக்களையும் பிரபலமான ராஜாக்களையும் சங்கரித்தீர்	”	சங் 136:17
கழுதையின் வாயைத் திறந்தீர்	”	எண் 22:28
சூரியனைக் கிபியோன் மேலும் சந்திரனை ஆயலோன் மேலும் தரித்து நிற்கச் செய்தவரே	”	யோசு 10:12
விடியற்காலத்தை அந்தகாரமாக்குகிறவரே	”	ஆமோ 4:13
பகலை இராத்திரியாய் அந்தகாரமாக்குகிறவரே	”	ஆமோ 5:8

20. குடிகளுடைய பொல்லாப்பி
னிமித்தம் ஆறுகளை
அவாந்திரவெளியாக
மாற்றுகிறவரே ஸ்தோத்திரம் சங் 107

21. நீரூற்றுகளை வறண்ட
ஸ்தலமாக மாற்றுகிறவரே " சங் 107

22. குடிகளுடைய பொல்லாப்பி
னிமித்தம் செழிப்பான
தேசத்தை உவர் நிலமாக
மாற்றுகிறவரே " சங் 107

23. அவாந்திர வெளியைத்
தண்ணீர்த்தடாகமாக
மாற்றுகிறவரே " சங் 107

24. கன்மலையைத் தண்ணீர்த்
தடாகமாக மாற்றுகிறவரே " சங் 11

25. கற்பாறையை நீரூற்றாக
மாற்றுகிறவரே " சங் 11

26. வறண்ட நிலத்தை
நீரூற்றுகளாக மாற்றுகிறவரே " சங் 107

27. மலடியைச் சந்தோஷமான
பிள்ளைத் தாய்ச்சியாக்குபவரே " சங் 11

28. பெறப்பண்ணுகிறவரே,
பிரசவிக்கப் பண்ணுகிறவரே " ஏசா 6

நிர்மூலமானதைக் கட்டுகிறவரே	ஸ்தோத்திரம்	எசே 36:36
பாழானதைப் பயிர் நிலமாக்குகிறவரே	”	எசே 36:36
காணாமற்போனதைத் தேடுகிறவரே	”	எசே 34:16
துரத்துண்டதைத் திரும்பச் செய்கிறவரே	”	எசே 34:16
நொண்டியானவனை இரட்சித்து தள்ளுண்டவனைச் சேர்த்துக் கொள்வேன் என்றவரே	”	செப் 3:19
நசல் கொண்டதைத் திடப்படுத்துகிறவரே	”	எசே 34:16
எலும்பு முறிந்ததைக் காயங்கட்டுபவரே	”	எசே 34:16
காற்றுக்கு ஒதுக்காகவும் பெருவெள்ளத்துக்குப் புகலிடமாகவும் இருப்பவரே	”	ஏசா 32:2
வறண்ட நிலத்துக்கு நீர்க்கால் களாகவும் விடாய்த்த பூமிக்குப் பெருங்கன்மலையின் நிழலாகவும் இருப்பவரே	”	ஏசா 32:2

38. குருடரின் கண்களைத்
திறப்பவரே ஸ்தோத்திரம் சங் 146

39. குருடரை அவர்கள் அறியாத
வழியில் நடத்துகிறவரே " ஏசா 42:1

40. குருடருக்கு முன்பாக இருளை
வெளிச்சமாக்குகிறவரே,
கோணலைச்
செவ்வையாக்குபவரே " ஏசா 42:1

41. சோர்ந்து போகிறவனுக்கு
பெலன் கொடுப்பவரே " ஏசா 40:2

42. சத்துவமில்லாதவனுக்குச்
சத்துவத்தைப் பெருகப்
பண்ணுகிறவரே " ஏசா 40:2

43. இளைத்துப் போன உம்
சுதந்திரத்தைத்
திடப்படுத்தினவரே " சங் 68

44. தாகமுள்ளவன் மேல்
தண்ணீரை ஊற்றுகிறவரே " ஏசா 44

45. வறண்ட நிலத்தின்மேல்
ஆறுகளை ஊற்றுகிறவரே " ஏசா 44

6. சமுத்திரத்தின் தண்ணீர்களை
வரவழைத்து அவைகளை
பூமியின் விசாலத்தின்
மேல் ஊற்றுகிறவரே ஸ்தோத்திரம் ஆமோ 9:6

7. நீதியுள்ளவர்கள் மேலும்
அநீதியுள்ளவர்கள் மேலும்
மழையைப் பெய்யப்
பண்ணுகிறவரே " மத் 5:45

8. எல்லார் மேலும் தயவுள்ளவரே " சங் 145:9

9. தீயோர் மேலும் நல்லோர்
மேலும் தமது சூரியனை
உதிக்கப் பண்ணுகிறவரே " மத் 5:45

0. எல்லா ஜீவன்களுக்கும்
ஏற்ற வேளையில் ஆகாரம்
கொடுக்கிறவரே " சங் 145:15

1. எல்லாருக்கும் ஜீவனையும்,
சுவாசத்தையும், சகலத்தையும்
கொடுக்கிறவரே " அப் 17:25

2. மனுஷரையும்,
மிருகங்களையும்
காப்பாற்றுகிறவரே " சங் 36:6

53. சகல பிராணிகளின்
வாஞ்சையையும்
திருப்தியாக்குகிறவரே
ஸ்தோத்திரம் சங் 145:1

54. விதைக்கிறவனுக்கு
விதையையும் புசிக்கிறதற்கு
ஆகாரத்தையும் அளிக்கிறவரே ” 2கொரி 9:1

55. பசியாயிருக்கிறவனுக்கு
ஆகாரம் கொடுக்கிறவரே ” சங் 146:

56. தமக்குப் பயந்தவர்களுக்கு
ஆகாரம் கொடுக்கிறவரே ” சங் 111:

57. கைகளின் கிரியையை
ஆசிர்வதிக்கிறவரே ” யோபு 1:1

58. தமக்குப் பயந்தவர்களுடைய
மனவிருப்பத்தின்படி
செய்கிறவரே ” சங் 145:1

59. தமக்குப் பிரியமானவனுக்கு
நித்திரை அளிக்கிறவரே ” சங் 127:

60. தம்மில் அன்புகூறுகிற
யாவரையும்
காப்பாற்றுகிறவரே ” சங் 145:2

61. கபடற்றவர்களைக் காக்கிற
கர்த்தரே ” சங் 116:

உண்மையாய்த் தம்மை
நோக்கிக் கூப்பிடுகிற
யாவருக்கும் சமீபமாயிருக்கிற
கர்த்தரே ஸ்தோத்திரம் சங் 145:18

தமது வழிகளிலெல்லாம்
நீதியுள்ளவரே " சங் 145:17

தமது கிரியைகளிலெல்லாம்
கிருபையுள்ளவரே " சங் 145:17

வெண்கலக் கதவுகளை
உடைப்பவரே இருப்புத்
தாழ்ப்பாள்களை முறிப்பவரே " ஏசா 45:4

அந்தகாரத்தில் உள்ள
பொக்கிஷங்களையும்
ஒளிப்பிடத்தில் உள்ள
புதையல்களையும்
கொடுப்பவரே " ஏசா 45:4

அந்தகாரத்திலிருக்கிற
ஆழங்களை
வெளியரங்கமாக்குகிறவரே " யோபு 12:22

துரத்துண்ட இஸ்ரவேலைக்
கூட்டிச் சேர்ப்பவரே " சங் 147:2

69. பறந்து காக்கிற பட்சிப்போல்
எருசலேமின் மேல்
(எங்கள் மேல்)
ஆதரவாயிருப்பவரே ஸ்தோத்திரம் ஏசா 31

70. பர்வதங்கள் எருசலேமைச்
சுற்றியிருக்குமாப்போல்
என்றென்றைக்கும் தம்முடைய
ஜனத்தைச் சுற்றி நீர்
இருக்கிறதற்காக " சங் 125

71. நான் எருசலேமைச் சுற்றி
அக்கினி மதிலாயிருந்து
அதின் நடுவில் மகிமையாய்
இருப்பேன் என்பவரே " சகரி 2

72. சீயோனில் நெருப்பையும்
எருசலேமில் சூளையையும்
உடையவரே " ஏசா 31

73. எருசலேமைக் கட்டுகிறவரே " சங் 147

74. கர்த்தாவே நீர் வீட்டைக்
கட்டுகிறவர் " சங் 127

75. கர்த்தாவே நீர் நகரத்தைக்
காக்கிறவர் " சங் 127

76. தெற்கத்தி வெள்ளங்களைத்
திருப்புவதுபோல் எங்கள்
சிறையிருப்புகளைத்
திருப்புகிறவரே ஸ்தோத்திரம் சங் 126:4

77. நெறிந்த நாணலை
முறிக்காமலும் மங்கியெரிகிற
திரியை அணைக்காமலும்
இருப்பவரே ” மத் 12:20

78. துன்மார்க்கரின் கயிறுகளை
கர்த்தர் அறுத்தீரே ” சங் 129:4

79. துன்மார்க்கரின் வழியைக்
கவிழ்த்துப் போடுகிறவரே ” சங் 146:9

80. துன்மார்க்கரைத் தரைமட்டும்
தாழ்த்துகிறவரே ” சங் 147:6

81. துன்மார்க்கரை சறுக்கலான
இடங்களில் நிறுத்திப் பாழான
இடங்களில் விழப்பண்ணுகிறீர் ” சங் 73:18

82. கட்டுக்கதைக்காரரின்
குறிகளை
அபத்தமாக்குகிறவரே ” ஏசா 44:25

83. குறி சொல்லுகிறவர்களை
நிர்மூடராக்குபவரே ” ஏசா 44:25

84.	தந்திரக்காரரின் கைகள் காரியத்தை முடிய நடத்தக் கூடாதபடி அவர்களுடைய உபாயங்களை அபத்தமாக்குபவரே	ஸ்தோத்திரம்	யோபு 5:12
85.	பூமியின் நியாயாதிபதிகளை அவாந்தரமாக்குபவரே	”	ஏசா 40:23
86.	பாவிகளுக்கு விலகினவரே	”	எபி 7:26
87.	தீங்குக்கு மனஸ்தாபப் படுகிறவரே	”	2சாமு 24:16
88.	மன்னிக்கத்தயை பெருத்தவரே	”	ஏசா 55:7
89.	பணிந்தவர்களின் ஆவியையும் நொறுங்கினவர்களின் இருதயத்தையும் உயிர்ப்பிக்கிறவரே	”	எசா 57:15
90.	ஒருவனைத் தாழ்த்தி ஒருவனை உயர்த்துகிறீரே	”	சங் 75:7
91.	தாழ்ந்தவர்களை உயரத்தில் வைக்கிறவரே	”	யோபு 5:10
92.	துக்கிக்கிறவர்களை இரட்சித்து உயர்த்துகிறவரே	”	யோபு 5:10
93.	பெருமையுள்ளவனுக்கு எதிர்த்து நிற்பவரே	”	1பேது 5:5

94. தாழ்மையுள்ளவனுக்கு கிருபை அளிக்கிறவரே ஸ்தோத்திரம் 1பேது 5:5

95. ஆதி முதற்கொண்டு தலைமுறைகளை வரவழைக்கிறவரே " ஏசா 41:4

96. ராஜாக்களைத் தள்ளி ராஜாக்களை ஏற்படுத்துகிறவரே " தானி 2:21

97. காலங்களையும் சமயங்களையும் மாற்றுகிறவரே " தானி 2:21

98. நீர்க்கால்கள் போலிருக்கும் ராஜாவின் இருதயத்தை தமது சித்தத்தின்படி திருப்புகிறவரே " நீதி 21:1

99. தேவரீர் எல்லாவற்றையும் ஆளுகிறவர் " 1நாளா 29:12

100. உம்முடைய கரத்திலே சத்துவமும் வல்லமையும் உண்டு " 1நாளா 29:12

101. எவரையும் மேன்மைப் படுத்தவும் பலப்படுத்தவும் உம்முடைய கரத்தினால் ஆகும் " 1நாளா 29:12

102. ஞானிகளுக்கு ஞானத்தையும் அறிவாளிகளுக்கு அறிவையும் கொடுக்கிறவரே ஸ்தோத்திரம் தானி 2:2

103. மனுஷனுக்கு அறிவை போதிக்கிறவரே " சங் 94:1

104. ஞானிகளை வெட்கப் படுத்தும்படி உலகத்தில் பைத்தியமானவைகளைத் தெரிந்து கொண்டீரே " 1கொரி 1:2

105. ஞானிகளை அவர்களுடைய தந்திரத்தில் பிடிக்கிறவரே " யோபு 5:1

106. பலமுள்ளவர்களை வெட்கப் படுத்தும்படி உலகத்தில் பலவீனமானவைகளைத் தெரிந்து கொண்டீரே " 1கொரி 1:2

107. உள்ளவைகளை அவமாக்கும்படி உலகத்தின் இழிவானவைகளையும் அற்பமாய் எண்ணப் பட்டவைகளையும் இல்லாதவைகளையும் தெரிந்து கொண்டீரே " 1கொரி 1:2

108. மெய்யாகவே ஜனங்களைச் சிநேகிக்கிறவரே ஸ்தோத்திரம் உபா 33:3

109. ஜனங்களுக்குக் கொடியாக நிற்கப்போகிறவரே " ஏசா 11:10

110. ஆதாமின் புத்திரரை வெவ்வேறாகப் பிரித்தவரே " உபா 32:8

111. சர்வ ஜனங்களின் எல்லைகளை திட்டம் பண்ணினவரே " உபா 32:8

112. ஜாதிகளைத் தண்டிக்கிறவரே " சங் 94:10

113. ஜாதிகளை ஆளுகிறவரே " சங் 22:28

114. சமுத்திரத்திலே வழியையும் வலிய தண்ணீர்களிலே பாதையையும் உண்டாக்குபவரே " ஏசா 43:16

115. அலைகள் கொந்தளிக்கத் தக்கதாய்ச் சமுத்திரத்தைக் குலுக்குகிறவரே " ஏசா 51:15

116. சமுத்திர அலைகள்மேல் நடக்கிறவரே " யோபு 9:8

117. சமுத்திரத்தின் ஆழங்களை மூடுகிறவரே " யோபு 36:30

118. சமுத்திர ஜலம் தன் கரையைவிட்டு மீறாதபடிக்கு அதற்கு எல்லையைக் கட்டளையிட்டவரே ஸ்தோத்திரம் நீதி 8:2

119. சமுத்திரங்களின் மும்முரத்தையும் அவைகளுடைய அலைகளின் இரைச்சலையும் ஜனங்களின் அமளியையும் அமர்த்துகிறவரே " சங் 65:

120. ஆயிரம் தலைமுறைக்கும் கிருபை செய்கிறவரே " எரே 32:1

121. பிதாக்களுடைய அக்கிரமத்தை பிள்ளைகள் மடியில் சரிக்கட்டுகிறவரே " எரே 32:1

122. ஆத்துமாவையும் சரீரத்தையும் நரகத்திலே அழிக்க வல்லவரே " மத் 10:2

123. நீதியாய்ப் பேசி இரட்சிக்க வல்லவரே " எசா 63:

124. முற்றும் முடிய இரட்சிக்க வல்லவரே " எபி 7:2

25. சோதிக்கப்படுகிறவர்களுக்கு உதவி செய்ய வல்லவரே ஸ்தோத்திரம் எபி 2:18

26. வழுவாதபடி எங்களைக் காக்க வல்லவரே " யூதா 24

27. தமது மகிமையுள்ள சந்நதானத்திலே எங்களை மாசற்றவர்களாக நிறுத்த வல்லவரே " யூதா 24

28. சகலவித கிருபையையும் பெருகச் செய்ய வல்லவரே " 2கொரி 9:8

29. தேவரீர் சகலத்தையும் செய்ய வல்லவர் நீர் செய்ய நினைத்தது தடைபடாது என அறிந்திருக்கிறேன் " யோபு 42:2

30. எங்களை ஸ்திரப்படுத்த வல்லவரே " ரோ 16:26

31. முடிவுபரியந்தம் எங்களை ஸ்திரப்படுத்துகிறவரே " 1கொரி 1:8

32. எனக்காக யாவையும் செய்து முடிப்பவரே " சங் 57:2

33. எனக்குக் குறித்திருக்கிறதை நிறைவேற்றுவீர் " யோபு 23:14

134. உம்முடைய சித்தத்தின்படி
யெல்லாம் செய்வீர் ஆகவே
ஸ்தோத்திரம் யோபு 23

135. மரணபரியந்தம் எம்மை
நடத்துகிறவரே ஸ்தோத்திரம் " சங் 48

ஆவிக்குரிய ஆசிர்வாதங்களுக்காக ஸ்தோத்திரம்

136. பிதாவாகிய தேவனின்
முன்னறிவின்படியே தெரிந்து
கொள்ளப்பட்டோமே ஸ்தோத்திரம் 1பேது

137. ஆவியானவரின் பரிசுத்த
மாக்குதலினாலே
கீழ்ப்படிதலுக்கு
தெரிந்து கொள்ளப்பட்டோமே " 1பேது

138. இயேசு கிறிஸ்துவின் இரத்தம்
தெளிக்கப்படுதலுக்கு தெரிந்து
கொள்ளப்பட்டோமே " 1பேது

139. தம்முடைய புண்ணியங்களை
அறிவிக்கும்படி
தெரிந்து கொண்டீரே " 1பே

40. முன்னறிந்த தேவனே ” ரோ 8:29

41. முன்னறிந்தவர்களைத் தமது
குமாரனுடைய சாயலுக்கு
ஒப்பாயிருப்பதற்கு
முன்குறித்தீரே ஸ்தோத்திரம் ரோ 8:29

42. எவர்களை முன்குறித்தீரோ
அவர்களை அழைத்தீரே ” ரோ 8:30

43. எவர்களை அழைத்தீரோ
அவர்களை
நீதிமான்களாக்கினீரே ” ரோ 8:30

44. எவர்களை நீதிமான்
களாக்கினீரோ அவர்களை
மகிமைப்படுத்தியுமிருக்கிறீரே ” ரோ 8:30

45. தமது மிகுந்த இரக்கத்தின்
படியே எம்மை மறுபடியும்
ஜெனிப்பீத்தீரே ” 1பேது 1:4

46. தேவவசனமாகிய அழிவில்
லாதவித்தினாலே எங்களை
ஜெனிப்பித்தீரே ” 1பேது 1:23

47. எங்களை கிரயத்துக்கு
கொண்ட ஆண்டவரே ” 2பேது 2:1

148. எங்களை அந்தகாரத்தினின்று தம்முடைய ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு வரவழைத்தீரே | ஸ்தோத்திரம் | 1பேது

149. தம்முடைய மகிமையினாலும் காருண்யத்தினாலும் எம்மை அழைத்தீரே | ” | 2பேது

150. கிறிஸ்து இயேசுவுக்குள் எம்மை தமது நித்திய மகிமைக்கு அழைத்தவரே | ” | 1பேது 5

151. கர்த்தராயிருக்கிற இயேசு கிறிஸ்துவுடனே ஐக்கியமாயி ருப்பதற்கு எங்களை அழைத்த தேவனே | ” | 1கொரி

152. ஆசிர்வாதத்தைச் சுதந்தரித்துக் கொள்ள அழைக்கப் பட்டிருக்கிறோமே | ” | 1பேது

153. சொல்லி முடியாததும் மகிமையால் நிறைந்ததுமாயிருக்கிற சந்தோஷத்தை அளிக்கிறீரே | ” | 1பேது

4. கிறிஸ்துவினுடைய நீதியால்
அப்போஸ்தலர்களைப் போல
அருமையான விசுவாசத்தைப்
பெற்றோமே ஸ்தோத்திரம் 2பேது 1:1

5. ஜீவனுக்கும் தேவபக்திக்கும்
வேண்டிய யாவற்றையும்
உம்முடைய திவ்ய வல்லமை
எமக்குத் தந்தருளியதற்காக " 2பேது 1:3

6. தேவகுமாரன் வந்து எமக்கு
புத்தியைத் தந்திருக்கிறீரே " 1யோ 5:20

7. பிதாவே நீர் முந்தி
எம்மிடத்தில் அன்பு
கூர்ந்தபடியால் உமக்கு " 1யோ 4:19

8. நாங்கள் தேவனுடைய
பிள்ளைகள் என்று அழைக்கப்
படும்படியாய் பிதாவானவர்
எமக்கு பாராட்டின அன்புக்காய் " 1யோ 3:1

9. பிதாவாகிய தேவனுக்கு
முன்பாக எம்மை ராஜாக்களும்
ஆசாரியர்களுமாக்கினீரே " வெளி 1:6

0. பரிசுத்தவான்களோடு ஒரே
நகரத்தாராய் மாற்றினீரே " எபே 2:19

161. தேவனுடைய
வீட்டாருமாக்கினீரே ஸ்தோத்திரம் எபே 2

162. எங்களைத் தம்முடைய
ஆவியினாலே
தேவனுடைய வாசஸ்தலமாகக்
கூட்டிக் கட்டி வருகிறீரே " எபே 2

163. நாங்கள் ராஜரீகமான
ஆசாரியக்கூட்டம் " 1பேது

164. நாங்கள் பரிசுத்த ஜாதி " 1பேது

165. நாங்கள் உமக்கு
சொந்தமான ஜனம் " 1பேது

166. நாங்கள் தேவனுக்கு உடன்
வேலையாட்கள் " 1கொரி

167. நாங்கள் தேவனுடைய
பண்ணை " 1கொரி

168. நாங்கள் தேவனுடைய
மாளிகை " 1கொரி

169. நாங்கள் தேவனுடைய
ஆலயம் " 1கொரி 3

170. நாங்கள்
கிறிஸ்துவினுடையவர்கள் "

71. நாங்கள் கிறிஸ்துவின் சரீரமாகவும் தனித்தனியே அவயவங்களாயிருக்கிறோம் ஸ்தோத்திரம் 1கொரி 12:27

72. தேவரீர் கொடுத்த இரட்சிப்புக்காக ” .....

73. தேவரீர் கொடுத்த நித்திய ஜீவனுக்காக ” .....

74. தேவரீர் கொடுத்த பரிசுத்த ஆவியின் அபிஷேகத்திற்காக ” .....

75. ஆவியானவரின் கிருபை வரங்களுக்காக ” .....

76. தேவரீர் அருளிய ஊழிய அழைப்புகளுக்காக ” .....

77. தேவனுடைய கிருபை வரங்களும் எங்களை அழைத்த அழைப்பும் மாறாதவைகள் ஆகவே உமக்கு ” ரோ 11:29

78. கர்த்தாவே மாட்சிமையும், வல்லமையும், மகிமையும், ஜெயமும், மகத்துவமும் உம்முடையவைகள் ஆகவே ஸ்தோத்தரிக்கிறோம் ” 1நாளா 29:11

179. வானத்திலும் பூமியிலும்
உள்ளவைகள் எல்லாம்
உம்முடையவைகள்
ஸ்தோத்திரம் 1நாளா 29:1

180. வானத்தின் கீழ் உள்ளவைகள்
எல்லாம் என்னுடையவைகள்
என்றீரே ” யோபு 41:1

181. பூமியும் அதின் நிறைவும்
உலகமும் அதிலுள்ள குடிகளும்
கர்த்தருடையவைகள் ” சங் 24:

182. கர்த்தாவே ராஜ்யம்
உம்முடையது ” 1 நாளா 29:1

183. நியாயத்தீர்ப்பு தேவனுடையது
என்றீரே ” உபா 1:1

184. பர்வதங்களின் உயரங்களும்
உம்முடையவைகள் ” சங் 95:

185. சமுத்திரம் உம்முடையது ” சங் 95:

186. இரட்சிப்பு கர்த்தருடையது ” சங் 3:

187. (எங்கள்) சரீரமோ
கர்த்தருக்கே உரியது ” 1 கொரி 6:1

188. நாங்கள் உம்முடையவர்கள் ” ஏசா 63:1

89. உமது நாமம் தரிப்பிக்கப்
பட்டவர்கள் நாங்கள்
ஆகவே உம்மை
ஸ்தோத்தரிக்கிறோம் ஸ்தோத்திரம் ஏசா 63:19

எங்கள் இரட்சகராகிய இயேசுவே உமது அற்புதங்களுக்காக ஸ்தோத்திரம்

90. தண்ணீரை திராட்சரசமாக
மாற்றினீர் ஸ்தோத்திரம் யோ 2:9

91. பிறவிக்குருடர், செவிடர்
ஊமையானவர்களை
காணவும் கேட்கவும் யோ 9:7
பேசவும் வைத்தீர் " மத் 9:33

92. முடவர், சப்பாணிகள், கூனர்
சூம்பின உறுப்புடையோர்
திமிர்வாதக்காரரை
சுகமாக்கினீர் " மத் 8:13

93. பிசாசின் வல்லமையில்
பிடிபட்டோரை விடுதலை
யாக்கினீர் " மத் 15:28

194. குஷ்டரோகிகளை
சுத்தமாக்கினீர் ஸ்தோத்திரம் லூக் 17:

195. மரித்த லாசரு, யவீருவின் மகள்,
நாயின் ஊர் விதவையின்
மகன்யாவரையும் மாற் 5:
உயிரோடெழுப்பினீர் " யோ 11:

196. காற்றையும் கடலையும்
அமர்த்தினீர் " மத் 8:

197. கடலின் மேல் நடந்தீர் " மத் 14:

198. உமது வார்த்தையின்படி
ஆழத்திலே வலைப்போட்ட
போது திரளான மீன்களும்
வலது பக்கத்திலே வலைப்
போட்ட போது 153 பெரிய
மீன்களும் பிடிக்கச்
செய்த அற்புதத்திற்காக " லூக் 5

199. வரிக்கான பணம்
மீன் வாயில் கிடைக்கச் செய்தீர் " மத் 17:

200. பெரும்பாடுள்ள ஸ்திரீயையும்
பேதுருவின் மாமியையும் 38
வருடமாய் வியாதியாயிருந்த மத் 8:
மனுஷனையும் குணமாக்கினீர் " மத் 9:

201. 5 அப்பமும் 2 மீன் கொண்டு
5000 பேருக்கு மேலானவரை
போஷித்து மீதியானதை
12 கூடைகளில்
நிரம்பச் செய்தீர் ஸ்தோத்திரம் மத் 14:20

202. 7 அப்பமும் சில
சிறு மீன்களைக் கொண்டு
4000 பேருக்கும்
மேலாகப் போஷித்தீர் " மத் 15:38

203. சந்திரரோகியையும் நீர்க்கோவை
வியாதியுள்ளவனையும்
குணமாக்கினீர் " லூக் 14:2

204. அத்திமரம் உமது சாபத்தால்
உடனே பட்டுப்போனது " மத் 21:19

205. உம்மைக் கொல்ல நினைத்த
மக்களிடமிருந்து அற்புதமாய்
மறைந்து போனீர் " லூக் 4:30

206. உம்மை பிடிக்க வந்த
போர்ச்சேவகரின் கூட்டத்தை
பின்னிட்டு விழச்செய்தீர் " யோ 18:6

207. மல்கூஸின் வெட்டப்பட்ட க்
காதை ஒட்ட வைத்தீர் " லூக் 22:51

208. மனிதனின் பாவ இருதயத்தை
உம்முடைய பரிசுத்த
இரத்தத்தினால் கழுவி
அவனை புதிய சிருஷ்டியாக
மாற்றும் மகத்தான இந்த
அற்புதத்திற்காக ஸ்தோத்திரம் 2கொரி 5:1

209. மரித்தோரிலிருந்து நீர்
உயிரோடு எழும்பின
அற்புதத்திற்காக " லூக் 24

210. எம்மாவூர் சீஷர்களோடு
பந்தியிருக்கையில்
அவர்களுக்கு மறைந்துபோன
அற்புதத்திற்காக " லூக் 24:3

211. கதவுகள் பூட்டியிருக்கையில்
அந்த அறைக்குள்ளிருந்த
சீஷர்களிடம் வந்து
அற்புதமாய் தரிசனம் தந்தீரே " யோ 20:1

வேதத்தில் உள்ள உம் வாக்குத்தத்தங்களுக்காக ஸ்தோத்திரம்

212. அவர் (கர்த்தர்) உன்னை வேடனுடைய
கண்ணிக்கும் பாழாக்கும் கொள்ளை
நோய்க்கும் தப்புவிப்பார் என்ற
வாக்குத்தத்தத்திற்காக ஸ்தோத்திரம் சங் 91:3

213. தமது சிறகுகளால் உன்னை
மூடுவார் என்ற வாக்குக்காக
ஸ்தோத்திரம் சங் 91:4

214. அவர் செட்டைகளின் கீழ்
அடைக்கலம் புகுவாய், அவர்
சத்தியம் உனக்கு பரிசையும்
கேடகமாகும் என்ற வாக்குக்காக
ஸ்தோத்திரம் சங் 91:4

215 இரவில் உண்டாகும் பயங்க
ரத்திற்கும் பகலில் பறக்கும் அம்புக்கும்
இருளில் நடமாடும் கொள்ளை
நோய்க்கும் மத்தியானத்தில் பாழாக்கும்
சங்காரத்துக்கும் பயப்படாதிருப்பாய் என்ற
வாக்குக்காக ஸ்தோத்திரம் சங் 91:5,6

216. உன் பக்கத்திலே ஆயிரம் பேரும்
உன் வலது பக்கத்தில் பதினாயிரம்
பேரும் விழுந்தாலும் அது உன்னை
அணுகாது என்ற வாக்குக்காக
ஸ்தோத்திரம் சங் 9

217. பொல்லாப்பு உனக்கு நேரிடாது
வாதை உன் கூடாரத்தை
அணுகாது என்ற வாக்குக்காக
ஸ்தோத்திரம் சங் 91

218. உன் வழிகளிலெல்லாம் உன்னைக்
காக்கும்படிக்கு உனக்காய் தம்முடைய
தூதர்களுக்கு கட்டளையிடுவார்
என்ற வாக்குக்காக ஸ்தோத்திரம் சங் 91

219. உன் பாதம் கல்லில் இடறாத
படி (தூதர்கள்) தங்கள் கைகளில்
ஏந்திக் கொண்டு போவார்கள்
என்ற வாக்குக்காக ஸ்தோத்திரம் சங் 91

220. சிங்கத்தின் மேலும் விரியன்
பாம்பின் மேலும் நீ நடந்து
பாலசிங்கத்தையும் வலுசர்ப்பத்தை
யும் மிதித்துப் போடுவாய்
என்ற வாக்குக்காக ஸ்தோத்திரம் சங் 91

221. என்னிடத்தில் வாஞ்சையாயி
ருக்கிறவனை விடுவிப்பேன், என்
நாமத்தை அவன் அறிந்திருக்கிற
படியால் அவனை உயர்ந்த
அடைக்கலத்திலே வைப்பேன்
என்ற வாக்குக்காக ஸ்தோத்திரம் சங் 91:14

222. என்னை நோக்கி கூப்பிடுவான்,
நான் அவனுக்கு மறு உத்தரவு
அருளிச் செய்வேன், ஆபத்தில்
நானே அவனோடிருந்து
அவனைத் தப்புவித்து
கனப்படுத்துவேன்
என்ற வாக்குக்காக ஸ்தோத்திரம் சங் 91:15

223. நீடித்த நாட்களால் அவனைத்
திருப்தியாக்கி என் இரட்சிப்பை
அவனுக்குக் காண்பிப்பேன்
என்ற வாக்குக்காக ஸ்தோத்திரம் சங் 91:16

224. கர்த்தர் தம்முடைய ஜனத்தை
நெகிழ விடாமலும் தம்முடைய
சுதந்திரத்தை கைவிடாமலும்
இருப்பார் என்ற வாக்குக்காக
ஸ்தோத்திரம் சங் 94:14

225. உன் கைகளின் பிரயாசத்தை நீ சாப்பிடுவாய் என்ற வாக்குக்காக ஸ்தோத்திரம் சங் 128

226. உனக்கு பாக்கியமும் நன்மையும் உண்டாயிருக்கும் என்ற வாக்குக்காக ஸ்தோத்திரம் சங் 128

227. உன் மனைவி உன் வீட்டோரங்களில் கனிதரும் திராட்சைக் கொடியைப் போல் இருப்பாள் என்ற வாக்குக்காக ஸ்தோத்திரம் சங் 128

228. கர்த்தர் சீயோனிலிருந்து உன்னை ஆசிர்வதிப்பார் நீ ஜீவனுள்ள நாளெல்லாம் எருசலேமின் வாழ்வைக் காண்பாய் என்ற வாக்குக்காக ஸ்தோத்திரம் சங் 128

229. உன் பிள்ளைகளின் பிள்ளைகளைக் காண்பாய் என்ற வாக்குக்காக ஸ்தோத்திரம் சங் 128

230. உன் சந்ததி மேல் என் ஆவியையும் உன் சந்தானத்தின்மேல் என் ஆசீர்வாதத்தையும் ஊற்றுவேன் என்ற வாக்குக்காக ஸ்தோத்திரம் ஏசா 44

231. இதோ பராக்கிரமனால் சிறைப்படுத்தப்
பட்டவர்கள் விடுவிக்கப் படுவார்கள்
பெலவந்தனால் கொள்ளையிடப்
பட்டதும் விடுதலையாக்கப்படும்
என்ற வாக்குக்காக ஸ்தோத்திரம் ஏசா 49:25

232. உன்னோடு வழக்காடுகிறவர்களோடு
நான் வழக்காடி உன் பிள்ளைகளை
இரட்சித்துக் கொள்வேன் என்ற
வாக்குக்காக ஸ்தோத்திரம் ஏசா 49:25

233. உன் பிள்ளைகளெல்லாரும்
கர்த்தரால் போதிக்கப்பட்டிருப்பார்கள்
உன் பிள்ளைகளுடைய சமாதானம்
பெரிதாயிருக்கும் என்ற
வாக்குக்காக ஸ்தோத்திரம் ஏசா 54:13

234. மலைகள் விலகினாலும் பர்வதங்கள்
நிலைபெயர்ந்தாலும் என் கிருபை
உன்னை விட்டு விலகாமலும்
என் சமாதானத்தின் உடன்படிக்கை
நிலைபெயராமலும் இருக்கும்
என்று உன் மேல் மனதுருகுகிற
கர்த்தர் சொல்லுகிறார் என்ற
வாக்குக்காக ஸ்தோத்திரம் ஏசா 54:10

235. என் கிருபை உனக்குப் போதும்
பலவீனத்திலே என் பலம்
பூரணமாய் விளங்கும்
என்ற வாக்குக்காக ஸ்தோத்திரம் 2கொரி 12

236. இரட்டிப்பான நன்மையைத்
தருவேன் இன்றைக்கே
தருவேன் என்ற வாக்குக்காக
ஸ்தோத்திரம் சகரி 9:

237. சிங்கக்குட்டிகள் தாழ்ச்சியடைந்து
பட்டினியாயிருக்கும் கர்த்தரைத்
தேடுகிறவர்களுக்கோ ஒரு
நன்மையும் குறைவுபடாது
என்ற வாக்குக்காக ஸ்தோத்திரம் சங் 34:

238. ஆசாரியர்களின் ஆத்துமாவை
கொழுமையானவைகளினால்
பூரிப்பாக்குவேன் என்ற
வாக்குக்காக ஸ்தோத்திரம் எரே 31:

239. என் ஜனங்கள் நான் அளிக்கும்
நன்மையினால் திருப்தி
ஆவார்கள் என்ற வாக்குக்காக
ஸ்தோத்திரம் எரே 31:

240. நான் உனக்குப் போதித்து நீ நடக்க
வேண்டிய வழியைக் காட்டுவேன்

உன் மேல் என் கண்ணை வைத்து
உனக்கு ஆலோசனை சொல்லுவேன்
என்ற வாக்குக்காகஸ்தோத்திரம் சங் 32:8

241. ஆபத்துக் காலத்தில் என்னை
நோக்கிக் கூப்பிடு நான் உன்னை
விடுவிப்பேன் நீ என்னை மகிமைப்
படுத்துவாய் என்ற வாக்குக்காக
ஸ்தோத்திரம் சங் 50:15

242. என்னை நோக்கி கூப்பிடு
அப்பொழுது நான் உனக்கு
உத்தரவு கொடுத்து நீ அறியாததும்
உனக்கு எட்டாததுமான பெரிய
காரியங்களை உனக்கு அறிவிப்பேன்
என்ற வாக்குக்காக ஸ்தோத்திரம் எரே 33:3

243. பூமியின் எல்லை எங்குமுள்ளவர்களே
என்னை நோக்கிப் பாருங்கள்
அப்பொழுது இரட்சிக்கப்படுவீர்கள்
என்ற வாக்குக்காக ஸ்தோத்திரம் ஏசா 45:22

244. கொடுங்கள் அப்பொழுது
உங்களுக்கு கொடுக்கப்படும்
என்ற வாக்குக்காக ஸ்தோத்திரம் லூக் 6:38

245. கேளுங்கள் அப்பொழுது
உங்களுக்குக் கொடுக்கப்படும்
என்ற வாக்குக்காக ஸ்தோத்திரம் மத் 7:

246. தேடுங்கள் அப்பொழுது
கண்டடைவீர்கள் என்ற
வாக்குக்காக ஸ்தோத்திரம் மத் 7:

247. தட்டுங்கள் அப்பொழுது
உங்களுக்குத் திறக்கப்படும்
என்ற வாக்குக்காக ஸ்தோத்திரம் மத் 7:

248. இரண்டு பேராவது மூன்று பேராவது
என் நாமத்தினால் எங்கே
கூடியிருக்கிறார்களோ அங்கே
அவர்கள் நடுவிலே இருக்கிறேன்
என்ற வாக்குக்காக ஸ்தோத்திரம் மத் 18:2

249. இதோ உலகத்தின் முடிவுபரியந்தம்
சகல நாட்களிலும் நான்
உங்களுடனே கூட இருக்கிறேன்
என்ற வாக்குக்காக ஸ்தோத்திரம் மத் 28:2

250. உன்னை இரட்சிப்பதற்காகவும்
உன்னைத் தப்புவிப்பதற்காகவும்
நான் உன்னோடு இருக்கிறேன்
என்ற வாக்குக்காக ஸ்தோத்திரம் எரே 15:2

251. நீ அவர்களுக்கு பயப்பட
வேண்டாம் உன்னைக் காக்கும்படி
நான் உன்னுடனே இருக்கிறேன்
என்ற வாக்குக்காக ஸ்தோத்திரம் எரே 1:8

252. நீ பயப்படாதே நான் உன்னுடனே
இருக்கிறேன், திகையாதே நான்
உன் தேவன் என்ற வாக்குக்காக
ஸ்தோத்திரம் ஏசா 41:10

253. நான் உன்னைப் பலப்படுத்தி
உனக்குச் சகாயம் பண்ணுவேன்
என்ற வாக்குக்காக ஸ்தோத்திரம் ஏசா 41:10

254. என் நீதியின் வலதுகரத்தினால்
உன்னைத் தாங்குவேன்
என்ற வாக்குக்காக ஸ்தோத்திரம் ஏசா 41:10

255. பயப்படாதே நான் உனக்கு
துணை நிற்கிறேன் என்ற
வாக்குக்காக ஸ்தோத்திரம் ஏசா 41:13

256. பயப்படாதே சிறுமந்தையே
உங்களுக்கு ராஜ்யத்தைக் கொடுக்க
உங்கள் பிதா பிரியமாயிருக்கிறார்
என்ற வாக்குக்காக ஸ்தோத்திரம் லூக் 12:32

257. நீ உயிரோடிருக்கும் நாளெல்லாம் ஒருவனும் உனக்கு முன்பாக எதிர்த்து நிற்பதில்லை என்ற வாக்குக்காக ஸ்தோத்திரம் யோசு 1:

258. நான் உன்னை விட்டு விலகுவதுமில்லை உன்னைக் கைவிடுவதுமில்லை என்ற வாக்குக்காக ஸ்தோத்திரம் யோசு 1:

259. நான் உன்னைப் பொல்லாதவர்களின் கைக்குத் தப்புவித்து உன்னைப் பலவந்தரின் கைக்கு நீங்கலாக்கி விடுவிப்பேன் என்ற வாக்குக்காக ஸ்தோத்திரம் எரே 15:2

260. துஷ்டன் இனி உன் வழியாய்க் கடந்து வருவதில்லை, அவன் முழுவதும் சங்கரிக்கப்பட்டான் என்ற வாக்குக்காக ஸ்தோத்திரம் நாகூ 1:1

261. கர்த்தர் உங்களுக்காக் யுத்தம் பண்ணுவார், நீங்கள் சும்மாயிருப் பீர்கள் என்ற வாக்குக்காக ஸ்தோத்திரம் யாத் 14:1

262. இன்றைக்கு நீங்கள் காண்கிற எகிப்தியரை இனி என்றைக்கும் காணமாட்டீர்கள் என்ற வாக்குக்காக ஸ்தோத்திரம் யாத் 14:13

263. உன்னை இந்த ஜனத்துக்கு எதிரே அரணான வெண்கல அலங்கமாக்குவேன் என்ற வாக்குக்காக ஸ்தோத்திரம் எரே 15:20

264. அவர்கள் உனக்கு விரோதமாக யுத்தம் பண்ணுவார்கள், ஆனாலும் உன்னை மேற்கொள்ள மாட்டார்கள் என்ற வாக்குக்காக ஸ்தோத்திரம் எரே 15:20

265. உன்னோடு போராடினவர்களைத் தேடியும் காணாதிருப்பாய், உன்னோடு யுத்தம் பண்ணின மனுஷர் ஒன்றுமில்லாமல் இல் பொருளாவார்கள் என்ற வாக்குக்காக ஸ்தோத்திரம் ஏசா 41:12

266. கர்த்தர் நல்லவர், இக்கட்டு நாளில் அரணான கோட்டை, தம்மை நம்புகிறவர்களை அறிந்திருக்கிறார் என்ற வாக்குக்காக ஸ்தோத்திரம் நாகூ 1:7

267. நான் நானே உங்களுக்கு ஆறுதல் செய்கிறவர் என்ற வாக்குக்காக ஸ்தோத்திரம் ஏசா 51:12

268. சிறுமைப்பட்டு ஆவியில் நொறுங்குண்டு என் வசனத்துக்கு நடுங்குகிறவனையே நோக்கிப் பார்ப்பேன் என்ற வாக்குக்காக ஸ்தோத்திரம் ஏசா 66:2

269. ஒருவனை அவன் தாய் தேற்றுவது போல நான் உங்களைத் தேற்று வேன் என்ற வாக்குக்காக ஸ்தோத்திரம் ஏசா 66:13

270. ஸ்திரீயானவள் தன் கர்ப்பத்தின் பிள்ளைக்கு இரங்காமல் தன் பாலகனை மறப்பாளோ, அவர்கள் மறந்தாலும் நான் உன்னை மறப்பதில்லை என்ற வாக்குக்காக ஸ்தோத்திரம் ஏசா 49:15

271. இதோ என் உள்ளங்கைகளில் உன்னை வரைந்திருக்கிறேன் உன் மதில்கள் எப்போதும் என் முன் இருக்கிறது என்ற வாக்குக்காக ஸ்தோத்திரம் ஏசா 49:16

272. நான் உனக்கு முன்னே போய்
கோணலானவைகளைச்
செவ்வையாக்குவேன்
என்ற வாக்குக்காக ஸ்தோத்திரம் ஏசா 45:2

273. நீ தண்ணீர்களைக் கடக்கும்போது
நான் உன்னோடு
இருப்பேன் என்றீர் ஸ்தோத்திரம் ஏசா 43:2

274. நீ ஆறுகளைக் கடக்கும்போது
அவைகள் உன்மேல்
புரளுவதில்லை என்றீர் ஸ்தோத்திரம் ஏசா 43:2

275. நீ அக்கினியில் நடக்கும்போது
வேகாதிருப்பாய் அக்கினி ஜுவாலை
உன்பேரில் பற்றாது
என்ற வாக்குக்காக ஸ்தோத்திரம் ஏசா 43:2

276. நீ அநேக ஜாதிகளுக்கு கடன்
கொடுப்பாய் நீயோ கடன்
வாங்காதிருப்பாய் என்ற
வாக்குக்காக ஸ்தோத்திரம் உபா 28:12

277. கர்த்தர் உன்னை வாலாக்காமல்
தலையாக்குவார், நீ கீழாகாமல்
மேலாவாய் என்ற வாக்குக்காக
ஸ்தோத்திரம் உபா 28:14

278. நீ கர்த்தருடைய கையில்
அலங்காரமான கிரீடம் உன்
தேவனுடைய கரத்தில்
ராஜ முடியுமாயிருப்பாய்
என்ற வாக்குக்காக ஸ்தோத்திரம் ஏசா 62:3

279. நான் கர்த்தர், எனக்குக்
காத்திருக்கிறவர்கள் வெட்கப்
படுவதில்லை என்ற
வாக்குக்காக ஸ்தோத்திரம் ஏசா 49:23

280. நான் கர்த்தர் நான் மாறாதவர்,
ஆகையால் யாக்கோபின்
புத்திரராகிய நீங்கள் நிர்மூல
மாகவில்லை என்ற
வாக்குக்காக ஸ்தோத்திரம் மல் 3:6

281. யாக்கோபுக்கு விரோதமான
மந்திரவாதம் இல்லை, இஸ்ரவேலுக்கு
விரோதமான குறிசொல்லுதலுமில்லை
என்ற வாக்குக்காக ஸ்தோத்திரம் எண் 23:23

282. யாக்கோபு என்னும் பூச்சியே
இஸ்ரவேலின் சிறுகூட்டமே,
பயப்படாதே நான் உனக்குத்
துணை நிற்கிறேன் என்று கர்த்தரும்

இஸ்ரவேலின் பரிசுத்தருமாகிய
உன் மீட்பர் உரைக்கிறார்
என்ற வாக்குக்காக ஸ்தோத்திரம் ஏசா 41:14

283. இப்போதும் யாக்கோபே
உன்னைச் சிருஷ்டித்தவரும்
இஸ்ரவேலே உன்னை உருவாக்கின
வருமாகிய கர்த்தர் சொல்லுகிறதாவது
பயப்படாதே உன்னை மீட்டுக்
கொண்டேன். உன்னைப் பேர் சொல்லி
அழைத்தேன் நீ என்னுடையவன்
என்ற வாக்குக்காக ஸ்தோத்திரம் ஏசா 43:1

284. என் நாமத்துக்குப் பயந்திருக்கிற
உங்கள் மேல் நீதியின் சூரியன்
உதிக்கும் என்ற
வாக்குக்காக ஸ்தோத்திரம் மல் 4:2

285. என் நாமத்தினாலே நீங்கள்
எதைக் கேட்டாலும் அதை
நான் செய்வேன் என்ற
வாக்குக்காக ஸ்தோத்திரம் யோ 14:14

286. என்னிடத்தில் வருகிறவனை நான்
புறம்பே தள்ளுவதில்லை
என்ற வாக்குக்காக ஸ்தோத்திரம் யோ 6:37

287. வருத்தப்பட்டு பாரஞ்சுமக்கிறவர்களே
நீங்கள் எல்லாரும் என்னிடத்தில்
வாருங்கள் நான் உங்களுக்கு
இளைப்பாறுதல் தருவேன்
என்ற வாக்குக்காக ஸ்தோத்திரம் மத் 11:28

288. நான் மாம்சமான யாவர்மேலும்
என் ஆவியை ஊற்றுவேன்
என்ற வாக்குக்காக ஸ்தோத்திரம் யோவே 2:28

289. என் ஜனங்கள் ஒருபோதும்
வெட்கப்பட்டுப் போவதில்லை
என்ற வாக்குக்காக ஸ்தோத்திரம் யோவே 2:27

290. என் ஜனம் சமாதான தாபரங்களிலும்
நிலையான வாசஸ்தலங்களிலும்
அமைதியாய் தங்கும் இடங்களிலும்
குடியிருக்கும் என்ற வாக்குக்காக
ஸ்தோத்திரம் ஏசா 32:18

291. கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை
விசுவாசி அப்பொழுது நீயும்
உன் வீட்டாரும்
இரட்சிக்கப் படுவீர்கள்
என்ற வாக்குக்காக ஸ்தோத்திரம் அப் 16:31

292. நித்திய ஜீவனை அளிப்பேன்
என்ற வாக்குக்காக ஸ்தோத்திரம் 1யோ 2:25

293. நிச்சயமாக நான் உன்னை
ஆசீர்வதிக்கவே ஆசீர்வதித்து
உன்னைப் பெருகவே பெருகப்
பண்ணுவேன்
என்ற வாக்குக்காக ஸ்தோத்திரம் எபி 6:14

294. நிச்சயமாக முடிவு உண்டு
உன் நம்பிக்கை வீண்போகாது
என்ற வாக்குக்காக ஸ்தோத்திரம் நீதி 23:18

295. உங்களில் ஒருவன் ஞானத்தில்
குறைவுள்ளவனாயிருந்தால்
யாவருக்கும் சம்பூரணமாய்
கொடுக்கிறவரும் ஒருவரையும்
கடிந்து கொள்ளாதவருமாகிய
தேவனிடத்தில் கேட்கக்கடவன்
அப்பொழுது அவனுக்குக்
கொடுக்கப்படும் என்ற
வாக்குக்காக ஸ்தோத்திரம் யாக் 1:5

296. பூரண இரட்சிப்பும் ஞானமும்
அறிவும் உன் காலங்களுடைய
உறுதியாயிருக்கும் என்ற
வாக்குக்காக ஸ்தோத்திரம் ஏசா 33:6

297. சின்னவன் ஆயிரமும் சிறியவன்
ஜாதியுமாவான், கர்த்தராகிய நான்

ஏற்ற காலத்தில் இதைத் தீவிரமாய் நடப்பிப்பேன் என்ற வாக்குக்காக ஸ்தோத்திரம் ஏசா 60:22

298. ஒரு ஸ்தலத்தை உங்களுக்காக ஆயத்தம் பண்ணப் போகிறேன், ஆயத்தம் பண்ணின பின்பு நான் இருக்கிற இடத்தில் நீங்களும் இருக்கும்படி நான் மறுபடியும் வந்து உங்களை என்னிடத்தில் சேர்த்துக் கொள்வேன் என்ற வாக்குக்காக ஸ்தோத்திரம் யோ 14: 2,3

299. சமாதானத்தை உங்களுக்கு வைத்துப் போகிறேன். என்னுடைய சமாதானத்தையே உங்களுக்குக் கொடுக்கிறேன் என்ற வாக்குக்காக ஸ்தோத்திரம் யோ 14:27

300. இதோ சீக்கிரமாய் வருகிறேன் என்ற வாக்குத்தத்தத்திற்காக ஸ்தோத்திரம் வெளி 12:22

ஆமென் கர்த்தராகிய இயேசுவே வாரும்

வெளி 22:10

சாட்சிகள்

1. கிறிஸ்துவுக்குள் அன்பான சகோதரர் அறிவது,

என் மகன் சேவியருக்கு கை கால் உடைந்து கோமா நிலையில் மருத்துவ மனையிலிருந்தான், அப்போது நானும் குடும்பத்தினரும் உபவாசத்தோடு ஒருவர் மாற்றி ஒருவர் "ஸ்தோத்திர பலிகளை ஏறெடுத்து கர்த்தரை துதித்து வந்தோம். 5வது நாளில் மகன் கண்விழித்தான், 13வது நாளில் நார்மல் வார்டுக்கு மாற்றப்பட்டான். 18வது நாள் அவனுக்கு நினைவு திரும்பியது. 20வது நாளில் உடைந்த காலுக்கு ஆபரேஷன் நடந்து 30வது நாளில் வீடு திரும்பினான். இன்று அவன் கல்லூரியில் சுகத்தோடு படிக்கிறான். இத்தனை அற்புதங்களையும் ஸ்தோத்திரபலிகளை கர்த்தருக்கு செலுத்தி நாங்கள் பெற்றுக் கொண்டோம். கர்த்தருக்கே மகிமை உண்டாவதாக.

சகோதரி அருள்ராணி

மதுரை

2. அன்பான பாஸ்டர் அறிவது,

பாலக்காடு என்னுமிடத்தில் ஒரு தற்காலிக வேலை கிடைத்ததினிமித்தும் நான் என் பிள்ளைகளையும் கணவனையும் விட்டு அங்கு செல்லவேண்டியிருந்தது. விடுமுறை நாட்களில் கொல்லத்திலுள்ள கணவர் வீட்டுக்கு வருவது வழக்கம்.

அப்படி வரும்போது எனது மாமியாரும் நாத்தனாரும் என்னை கொடுமை படுத்தினார்கள். பின்னர் அவர்கள் என்னை குறித்து தவறாக பேசி என் கணவருக்கும் எனக்கும் பெரும் சண்டையை உருவாக்கினார்கள். ஆகவே நான் வேலையை ராஜினாமா செய்தேன். திருச்சியில் உள்ள என் சகோதரியிடம் என் பிரச்சனையை பகிர்ந்த கொண்டபோது அவர் உங்கள் ஸ்தோத்திர பலிகள் ஆயிரம் என்ற புத்தகத்தை அனுப்பி தினமும் கர்த்தரை துதிக்க கூறினாள். நான் துதிக்க ஆரம்பித்தேன். என் மாமியாரும் நாத்தனாரும் அமைதியானார்கள். எனக்கும் கணவருக்கும் இடையே இருந்த மனவேறுபாடு நீங்கி சமாதானம் அடைந்தோம். என் தகப்பனாரின் வீட்டை என் கர்த்தர் எனக்கு கொடுத்தபடியால் நாங்கள் குடும்பமாக அங்கு குடிபெயர்ந்தோம். தற்போது சமாதனாமாய் வாழ்கிறோம். கர்த்தருக்கே மகிமை.

சகோதரி ஹானா

கொல்லம்.

3. அன்புள்ள ஐயா அவர்களுக்கு,

எனக்கு சிறுவயதில் அப்பெண்டிக்ஸ் ஆபரேஷன் நடந்தது. ஆபரேஷன் செய்த டாக்டர்,

திருமணத்திற்கு பிறகு எனக்கு குழந்தை பிறக்காது என்று என் பெற்றோரிடம் கூறினார். எனக்கு மே மாதம் 2008ம் ஆண்டு திருமணம் நடந்தது. நான் பத்தாயிரம் ஸ்தோத்திர பலிகளை கர்த்தருக்கு செலுத்தினேன். நான் இப்போது கர்பவதியாக உள்ளேன். கர்த்தருக்கே மகிமை.

சகோதரி ஷர்மிளா

4. சகோதரரே,

நான் ஒரு இந்து மதத்தை சார்ந்த பெண். ஆனால் கிறிஸ்தவ மதம் மீது ஒரு பற்று உண்டு. எனக்கு Weezing (இழுப்புக்கஷ்டம்) இருந்தது. நான் ஸ்தோத்திர பலிகள் ஆயிரம் என்ற புத்தகத்தை படித்து, ஆண்டவரை துதித்து இந்த வியாதி நீங்க இயேசுவிடம் வேண்டினேன். ஒரே வாரத்தில் எனக்கு சுகம் கிடைத்தது. இந்த சாட்சியை தாங்கள் புத்தகத்தில் வெளியிட கேட்டுக்கொள்கிறேன்.

ஆ. சீதாலட்சுமி

சென்னை

5. பாஸ்டர் ஐயா,

எனது செல்போனை என் மகன் தண்ணீரில் போட்டு நனைத்து என்னிடத்தில் கொண்டு வந்தான். நான் அதை கழற்றி பிரித்து தண்ணீரை

துடைத்து மின்விசிறி மூலம் உலறவைத்து என்னென்னமோ செய்து பார்த்தும் போன் செயல்படவில்லை. மிகவும் அழுதேன். அப்போது ஸ்தோத்திர பலி புத்தகத்தில் சாட்சிகளை படித்த ஞாபகம் வந்தது. நானும் முழங்கால்படியிட்டு ஸ்தோத்திர பலிகளை ஏறெடுத்து ஜெபித்தேன். கர்த்தர் எனக்கு இரங்கி அற்புதம் செய்தார். மீண்டும் போன் வேலை செய்ய ஆரம்பித்தது. ஆண்டவருக்கு ஸ்தோத்திரம்.

சகோதரி ரூத்

உச்சம்பட்டி - தருமபுரி

6. கர்த்தருக்குள் அன்பான ஐயா,

நான் மோட்டார் பைக்கிலிருந்து கீழே விழுந்ததால் என் முதுகு தண்டுவட எலும்பு முறிந்துவிட்டது. ஒரு மாதம் சென்றபின் அறுவை சிகிச்சை செய்து தகடு பொருத்த வேண்டும் என்று மருத்துவர் கூறி வீட்டிற்கு அனுப்பினார். அவ்விதமாக நடக்க என் தேவன் விடமாட்டார் என்று நான் சொல்லும் போது டாக்டர் சிரித்தார். வீட்டிற்கு வந்த மறு நாள் தாங்கமுடியாத வலி வேதனை. 104°F காய்ச்சல். முதுகில் பெல்ட் போட்டிருந்தேன் வலிதாங்க முடியாமல் பெல்ட்டை கழற்றி போட்டுவிட்டு இரவு 11 மணிமுதல் 12

மணிவரை அழுதேன். பின்பு தாங்கள் எழுதிய ஸ்தோத்திர பலிகள் ஆயிரம் என்ற புத்தகத்தை வலி உள்ள இடத்தில் வைத்து ஸ்தோத்திரம் பண்ணி ஜெபித்து புத்தகத்தின் மேலேயே படுத்து எப்படி தூங்கினேன் என தெரியவில்லை. 2 மணியளவில் விழித்தேன். உடல் முழுவதும் வியர்த்து நனைந்திருந்தது. சாதாரணமாக எப்பொழுதும் எழும்பி ஜெபிப்பதுபோல் எழும்பி ஜெபித்தேன். வலியில்லை கீழே விழுந்த 13ம் நாள் சுகம்பெற்றேன். இந்த வலி மீண்டும் வராமலிருந்தால் ஸ்தோத்திர பலிகள் ஆயிரம் புத்தகத்தின் வல்லமை பற்றி சாட்சி எழுதுவேன் என பொருத்தனை செய்தேன். மீண்டும் வலி வரவில்லை. கர்த்தருக்கே மகிமை.

சகோதரி சலோமி ஸ்டீபன்.

பாளையங்கோட்டை

7. அன்பான பாஸ்டர் அறிவது,

எனது மூன்று மகள்களுக்கு திருமணமாகாமலிருந்தது. மிகவும் வருத்தப்பட்டேன். ஸ்தோத்திர பலிகள் ஆயிரம் படித்து துதித்து துதித்து என் மகள்களுக்கு திருமணம் 2004ம் ஆண்டு டிசம்பரிலிருந்து ஆகஸ்ட் 2005க்குள் நடந்தது. என் தேவனுக்கு நன்றி.

சகோதரி ரீட்டா அலெக்ஸாண்டர்

பெங்களூர்

8. அன்பான பாஸ்டர் அறிவது,

ஒரு விசுவாசிமூலம் தங்களது புத்தகம் எனக்கு கிடைத்தது. அப்புத்தக்தை வாசித்து தேவனை துதிக்க ஆரம்பித்ததிலிருந்து பல நன்மைகளை பெற்றுக் கொண்டேன். என்னிடமிருந்து சாத்தான் தனது சக்தியால் எங்களது சொத்தை ஏமாற்றி பரித்துக் கொண்டான். ஒரு வருடகாலமாக தேவனை துதித்து அவரிடம் கதறி ஜெபித்தேன். கர்த்தர் ஒரு வீட்டையும், ஒரு நிலத்தையும் எனக்கு மீட்டு தந்தார். கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவிற்கே மகிமை உண்டாவதாக.

சகோதரி ரோஸி

கோவா

9. அன்புள்ள அங்கிள்,

நான் ஒரு இஸ்லாமிய பெண். எனது வாழ்க்கையில் தேவன் ஸ்தோத்திர பலிகள் மூலம் பல அற்புதங்கள் செய்துள்ளார்.

அ. எனது தந்தை ஒரு விபத்தில் சிக்கி கோமா நிலைக்கு உள்ளானார். டாக்டர்கள் கைவிட்டனர், எனது தோழி மூலம் உங்கள் புத்தகம் கிடைத்தது. நான்

அதைப் படித்தேன். தேவன் கேட்டு என் தந்தைக்கு உயிர் பிச்சை கொடுத்தார்.

ஆ.எனது அண்ணன் வெளிநாடு செல்ல விசா வெகு நாட்களாக கிடைக்கவில்லை. ஸ்தோத்திர பலிகளை செலுத்தின மறுநாளே விசா கிடைத்தது.

இ. ஆஸ்திரேலியாவில் எங்களுக்கு சொந்த வீடு இல்லாததால் எங்கள் பெரியப்பா வீட்டில் தங்கி இருந்தோம். நான் இந்த புத்தகத்தை படிப்பதை பார்த்த என் பெரியப்பா அதை கிழித்துப் போட்டார். கிழித்த சில நிமிஷத்தில் அவரது கை செயல் இழந்து போயிற்று, அவருக்கு எந்த வேலையும் செய்ய முடியாமல் போனது. நான் அவரை முழங்கால் படியிட்டு தேவனிடம் மன்னிப்பு கேட்டு அப்புத்தகம் முழுவதையும் படிக்க கூறினேன். அவரும் அதை செய்தார். தேவன் அவரை மன்னித்தார். அடுத்த நாள் அவரது கை முன்பு போல செயல்பட ஆரம்பித்தது. நானும் என் குடும்பத்தினரும் பெரியப்பாவும் இங்கு உள்ள கிறிஸ்தவ ஆலயத்திற்கு செல்கிறோம். இயேசுவுக்கே புகழ்ச்சி.

சகோதரி ஹசினா

ஆஸ்திரேலியா

10. கிறிஸ்துவுக்குள் பிரியமான சகோதரர் அறிவது,

நீங்கள் வெளியிட்டுள்ள ஸ்தோத்திர பலிகள் ஆயிரம் என்கிற புத்தகத்தை நான் தினமும் உபயோகித்து வருகிறேன். தேவனிடத்தில் நான் மூன்று காரியங்களைக் கேட்டேன்.

1. எனக்கும் என் கணவருக்கும் நல்ல வேலை கிடைக்க
2. கடனிலிருந்து விடுதலை
3. நாங்கள் ஒருவரிடம் கொடுத்திருந்த ரூ.62,750/- அவரிடமிருந்து திரும்ப கிடைக்க

தேவன் எல்லா விண்ணப்பங்களுக்கும் பதில் அளித்தார். அப்போது ஆயிரம் ஸ்தோத்திரங்களையும் எழுதும் படியாய் மனதில் ஏவப் பட்டேன். அவைகளை பார்த்து எழுதி முடித்தபோது எனக்கும் என் கணவருக்கும் பதவி உயர்வு கிடைத்தது. தேவன் கொடுத்த இந்த புத்தகத்திற்காக தேவனை துதிக்கிறோம்.

சகோதரர் உதய்
சகோதரி சுமிதா உதய்.
குண்டூர் - ஆந்திரா

11. அன்பான பாஸ்டர் அறிவது,

நான் தினமும் தங்களது புத்தகத்தை தேவனை துதிக்கவும், சுகத்திற்காக ஜெபிக்கவும்

பயன்படுத்துவதுண்டு. நான் ஒருவியாதியுமில்லாமல் சுகதேகியாக இருந்தேன். ஆனால் கடந்த பிப்ரவரி மாதம் 2008ல் நான் வியாதிப்பட்டேன். தலையில் மிகுந்த வேதனையோடு இரவில் தூக்கமில்லாமல் இருந்தபடியால் ஒரு வேளை எனக்கு பிசாசு பிடித்துள்ளதோ என்று எண்ணினேன். பகலிலும் என்னால் தூங்கமுடியவில்லை. பல மருத்துவர்களிடம் சென்றும் பயனில்லை. எங்கு வலி என்ன வலி என்று கண்டுபிடிக்கமுடியவில்லை. பெரிய வியாழக்கிழமை அன்று தேவனுக்கு தொடர்ச்சியாக 1000 ஸ்தோத்திர பலிகளை ஏறெடுக்க ஆரம்பித்தேன். பெரிய வெள்ளி கிழமை விடியற்காலை 5 மணியளவில் ஒருவரின் கை என்னை தொட்டது. உன் வாயை திற வலி உன் பல்லில் தான் உள்ளது என்னும் சத்தம் கேட்டது. உடனே நான் எழுந்து இது இயேசுதான் என்று சத்தமிட்டு கூறினேன். மெய்யாகவே இயேசுதான் என்னை தொட்டு, எனக்கு எங்கு வலியிருக்கு என்பதை காட்டினார். அடுத்த நாள் பல் மருத்துவரிடம் சென்று பல்லை பிடுங்கிவிட்டேன். வலி நீங்கியது. மனதைரியம் கிடைத்தது. .இயேசு துதிகளின் மத்தியில் வாசம் செய்கிறார். என்றென்றும் அவர் நாமம் துதிக்கப்படுவதாக.

சகோதரி. G. ரோஸ்

கடந்த ஆகஸ்ட் மாதம் 2007ல் நான் வேலூர் C.M.C மருத்துவமனையில் தைராயிடு கேன்சருக்கு சிகிச்சை பெற்றுவந்த 78வயதான என் தாயாரை கவனித்து கொண்டிருந்தபோது. ஸ்தோத்திர பலிகள் ஆயிரம் என்ற உங்களது புத்தகத்தை கண்டு அதை குறைந்த விலையில் வாங்கினேன்.

தற்சமயம் நாங்கள் மிஜோராமிலுள்ள எங்களுடைய வீட்டுக்கு திரும்பிவிட்டோம். நான் தினமும் புத்தகத்தை வாசித்து கர்த்தரை துதித்ததால் என் தாயார் சுகம் பெற்றார்கள். அலகாபாத்திலுள்ள வேதாகம கல்லூரியில் படித்து கொண்டிருக்கும் என் மகன் பில்லிக்கும் அதிக இரத்த அழுத்தம் ஜீரமும் இருந்தது. நான் வேதனையோடு அற்புதமான உங்கள் புத்தகத்தின் மூலம் அநேக ஸ்தோத்திரங்களை தேவனுக்கு செலுத்தினேன். இரண்டு நாட்களுக்குப்பின் என் மகன் தொலைபேசி மூலம் தனக்கு எந்தவித வியாதியும் இல்லை என்று மருத்துவர்கள் கூறியதாக தெரிவித்தான். கர்த்தருடைய தழும்புகளினால் அவன் சுகம்பெற்றான்.

தங்களைப்போன்ற பாஸ்டர்களுக்காக தேவனை துதிக்கிறேன்.

பிரெண்டா லால்குங்கி

அய்ஸ்வல் - மிஜோரம்

13. கிறிஸ்துவுக்குள் அன்பான பாஸ்டர்

அறிவது, தங்கள் புத்தகத்தை குவெய்த் தேசத்தில் ஒரு இந்திய சகோதரி மூலம் பெற்றேன். என் கணவர் என்னை கைவிட்ட நிலையில் தங்கள் புத்தகம் என்னுடைய வருத்தத்தை மேற்கொள்ளவும் மறக்கவும் எனக்கு மிகவும் உதவியது. என்னுடைய அறையில் தங்கியிருந்த என் தோழிக்கு, கர்த்தரை துதித்ததால் ஒரு வேலை கிடைத்தது, மாத்திரமல்ல, காணாமற் போன அவளுடைய அடையாள அட்டை கிடைக்கும் படியாக அவள் தொடர்ந்து தங்கள் புத்தகத்தின் மூலம் மூன்று நாள் தேவனைத் துதித்தாள். அதை கண்டெடுத்த ஒருவர் தொலைபேசி மூலமாய் என் தோழியை தொடர்பு கொண்டு அதை மூன்று நாளுக்குப்பின் கொண்டு வந்து கொடுத்தார். மேலும் நாங்கள் தினமும் சத்தமாய் துதிப்பதை கேட்ட வீட்டு உரிமையாளரான

சகோதரி தன் விக்கிரகங்களுக்கு தீபம் எற்றுவதை விட்டு எங்களோடு கர்த்தரைத் தொழுது கொள்ள ஆலயத்துக்கு வர ஆரம்பித்தாள்.

அல்லேலூயா!

சகோதரி. ரோமினா
குவெய்த்

14. அன்பான பாஸ்டர்,

நான் தேவ பக்தியின் வேஷத்தை தரித்தவளாய் பாவத்தில் வாழ்ந்து கொண்டிருந்தேன். ஆனால் தங்களின் புத்தகத்தின் மூலமாய் தேவன் என்னை உண்மையாய் அவரை நேசிக்கவும், ஆவியுடனும் உண்மையுடனும் அவரை துதிக்கும் படியாகவும் மாற்றினார். மாத்திரமல்ல தேவனைத் துதியுங்கள் என்று மற்றவர்களுக்குச் சொல்லும் தேவ கிருபையும் பெற்றேன். பாவியாய் இருந்த என்னை மாற்றி என்னை துதிக்கச் செய்த என் தேவனுக்கு நன்றி கூறுகிறேன்.

சகோதரி. புஷ்பா
சேலம்.

15. அன்பின் சகோதரரே,

நான் இரச்சிக்கப்பட்டு ஞானஸ்நானம் பெற்றவள். ஆனால் பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தை பெறாதவளாயிருந்தேன். இச்சையின் ஆவியால் பிடிபட்டிருந்த ஒரு சகோதரி தனக்காக ஜெபிக்க கேட்க நானும் அவன் தலை மீது கை வைத்து ஜெபித்தேன். உடனே நானும் அந்த ஆவியினால் தாக்கப்பட்டு தீய இச்சையான எண்ணங்களால் வேலை ஸ்தலத்தில் அலைக்கழிக்கப் பட்டேன். அத்தீய எண்ணங்கள் என்னை அடிமை படுத்த முயன்றன. ஆகவே வேலையை ராஜினாமா செய்துவிட்டு தேவனிடம் ஜெபிக்க ஆரம்பித்தேன். தினமும் மூன்று வேளை துதிகளை கர்த்தருக்கு ஏறெடுத்தேன். தேவன் என்னை அசுத்த எண்ணங்களிலுமிருந்தும் இச்சையின் ஆவியின் பிடியிலிருந்தும் என்னை விடுவித்தார். அல்லேலூயா!

சகோதரி. விஜி
கவுண்டபாளையம்

அன்பின் வேண்டுகோள்

கிறிஸ்துவுக்குள் அன்பானவர்களே, இப்புத்தகத்தின் மூலம் பயனடைந்திருப்பீர்கள் என நம்புகிறேன். இப்புத்தகம் தமிழிலும், ஆங்கிலத்திலும், தெலுங்கிலும், மலையாளத்திலும், கன்னடத்திலும், இந்தியிலும், சிங்களத்திலும், மாரத்தியிலும், பார்வைற்றோருக்காக பிரெய்லி தமிழிலும், பிரெய்லி ஆங்கிலத்திலும் வெளியிடப்படுகிறது. மேலும் கர்த்தரின் கிருபையோடு, ஒரியா, பெங்காலி, குஜராத்தி, பஞ்சாபி, நேப்பாளி ஆகிய மொழிகளிலும் வெளியிட விரும்புகிறோம். இப்பணியில் பங்கு பெற விரும்புவோர் தங்களின் ஜெபத்தாலும், காணிக்கையாலும் தாங்கும் படி அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக,

பாஸ்டர் .E.விக்ளிஃப்டேவிட்.

Pastor E. Wycliff David

THE CHURCH OF THE LIVING GOD

48, S.V. Koil Street, Kamaraj Nagar, Sanatorium

Chennai - 600 047. Ph: 22381426

e-mail: wycliffthousandpraises@yahoo.com

web site: www.thelivinggodchurch.org